# யாதவர் பாசறை

ஆசிரியர் மற்றும்
வெளியிடுபவர் :
**வி. யுவராஜ்**

ஆசிரியர் குழு :
**செ.மு. கோபாலகிருஷ்ணன்**
**வி. சேகர்**
**ந. விவேகராகவன்**


அலுவலகம் :
**வி. யுவராஜ்**
யாதவர் பாசறை,
7, பார்த்தசாரதி சுவாமி தெரு,
திருவல்லிக்கேணி,
சென்னை - 600 005.
தொலைபேசி : 9840161517.


சந்தா விவரம் :
ஆயுள் சந்தா : ரூ.500/-
ஆண்டு சந்தா ரூ.100/-



அன்பு யாதவ சகோதர,
சகோதரிகளே,

வணக்கம்,

அண்மையில் நமது மாநிலத்திற்கு தேர்தல் தேதி அறிவிக்கப்பட்டதை அனைவரும் அறிந்திருப்பீர்கள். ஒவ்வொருசமுதாயமும்தனக்கென்று ஒரு அமைப்பை ஏற்படுத்தி, தனது சமுதாயத்தின் ஓட்டு வங்கியின் வலிமையை காட்டி, முக்கிய கட்சிகளான, தி.மு.க. மற்றும் அ.தி.மு.க.வுடன் தேர்தல் கூட்டணி ஏற்படுத்தியுள்ளது. ஆனால் நமக்கென்று எந்த ஒரு அமைப்பும் வலிமையாக இல்லை. ஆகையால் கூட்டணி பேசுவதற்கு வாய்ப்பும் இல்லை, வலிமையும் இல்லை, இதுவரையில். குறைந்த பட்சம் பெரிய கட்சிகளில் போட்டியிட யாதவருக்கு வாய்ப்பளித்தாலே நமக்கு மகிழ்ச்சி.

தமிழ்நாட்டு மக்கள் தொகையில் குறைந்தது 10%, யாதவர்கள் இருந்தும் கூட நமக்கு இந்த அவல நிலை. இதற்கு காரணம் யார் என்று ஒருவரையொருவர் சாடிக் கொள்வதை விட, என்ன செய்ய வேண்டும் என்று யோசிப்பதே நன்மை பயக்கும். மற்ற சமுதாயத்தினர் தேர்தலில் தனித்து போட்டியிட்டு தனது செல்வாக்கை நிரூபித்ததால்தான் இன்று கூட்டணியில் அவர்களுக்கு வாய்ப்பு கிடைத்திருக்கிறது. வரும் சட்டமன்ற தேர்தலில், நாம் தனியாக போட்டியிடுவதற்கு வாய்ப்பு இல்லை. ஆகையால், வரும் பஞ்சாயத்து தேர்தலில் யாதவர்கள் ஓர்அமைப்பின் கீழ் போட்டியிட்டு வெற்றி பெறுவோம்.

இந்த சட்டமன்ற தேர்தலில், நமக்குரிய அங்கீகாரம் கிடைக்கவில்லையென்று அங்கலாய்க்காமல் படிப்படியான முன்னேற்றமே நிலையான முன்னேற்றம் என்று உணர்ந்து, நமது வருங்கால சந்ததியினர் வளம் பெற, பொறுமையோடு போராடி வெற்றி பெறுவோம்.

இப்படிக்கு
உங்கள் சகோதரன்,
**வி. யுவராஜ்**
ஆசிரியர்

AEPL

# AMBLY ENGINEERING PRIVATE LIMITED

1, Madurai Veeran Koil Street,T. Nagar, Chennai - 600 017.

**Phone : 24363435, 24363132 www.amblyengineering.com**



Industrial Structures



Heavy Equipment Erection



Industrial Piping



Ship Building

*With best compliments from :*

**P. MUTHUKUMARASAMY,** B.E., M.B.A.,

**G.K.KANNAN,** B.E,

9380410248

# ARCH ALUM FABS

***Aluminium Cladding  * Structural Glazings**

***Doors* Windows* Partitions* Ventilators**

***False Ceiling**

**Plot No.20, Arignar Anna Industrial Estate,**

**Mettukuppam, Ph: 6562 3307, 65623308, 24761830**

**E-mail: gkkannan@archalumfabs.com**

**Vanagaram,  Chennai – 600 095.**

**(Opp.Porur Gardens Phase I)**

# 108 வைணவத் திருத்தலங்கள்

## சோழநாட்டுத் திருப்பதிகள்

### 18. திருக்கண்ணங்குடி

கண்ண பெருமானின் விளையாட்டுக்கள் தான் எத்தனை எத்தனை ? அவற்றில் ஒன்று நடந்த இடம் தான் திருக்கண்ணங்குடி. இது திருவாரூருக்கு 14 கிலோ மீட்டர் தொலைவில் சிக்கலுக்கும் கீவளூருக்குமிடையில் ஆழியூர் என்னும் சிறிய ஊரிலிருந்து 1 கிலோ மீட்டர் தொலைவில் இருக்கிறது. ஆறு, காடு, நகரம், ஆலயம், தீர்த்தம் என்று இந்த ஐந்தும் கொண்டு மிகவும் அற்புதமாக அமைந்த ஸ்தலம் என்பதால் பஞ்ச புத்ரா ஸ்தலம் அல்லது பஞ்ச கிருஷ்ண க்ஷேத்திரம் என்று பெரிதும் போற்றப்படுகிறது.

ஐந்து நிலை கொண்ட இராஜகோபுரம், இரண்டு பிராகாரங்களுடன் பக்த உலா மண்டபம், சோபன மண்டபம், மகா மண்டபம் அர்த்த மண்டபமும் கொண்டு மூலவர் ஸ்ரீ லோகநாதப் பெருமாள், சியாமள மேனிப் பெருமாள் நின்ற கோலத்தில் காட்சி தருகிறார். தாயார் லோகநாயகி, உத்ஸவர் அரவிந்தவல்லி. தீர்த்தம் ராவண புஷ்கரணி. கோயிலுக்குள் எட்டு தீர்த்தக் கிணறுகள் உண்டு. உத்ஸவர் தாமோதரப் பெருமாள். இடது கரத்தை இடுப்பில் வைத்துக் கொண்டு தரிசனம் தருகிறார். விமானம் உற்பலாவதகம். தல விருட்சம் மகிழமரம். காயா மகிழ்; உறங்காப்புளி; தோலா வழக்கு ஊறாக்கிணறு திருக்கண்ணங்குடி என்று பல்வேறு அதிசயங்களைக் கொண்டு இத்தலம் விளங்குகிறது.

வசிஷ்டர், வெண்ணையக் கொண்டு கிருஷ்ணரை உருவமாகப் பிடித்து அது இளாகாதவண்ணம் வைத்து பகவானை வணங்கிக் கொண்டிருந்தார். பகவான் கிருஷ்ணன், வசிஷ்டரை சோதிக்க ஒரு நாள் தானே குழந்தையாக வந்து வசிஷ்டர் பூஜித்த வெண்ணெய்க் கிருஷ்ணனை உண்டு விட்டார். இதைக் கண்டு பதறி, குழந்தையானக் கிருஷ்ணரைத் துரத்த அந்த குழந்தை இந்தக் கோயிலிலுள்ள மகிழமரத்தடியில் பதுங்கியது. அங்கு தவம் செய்த மகரிஷிகள் கிருஷ்ணனை யாரென்று அறியாமல் கட்டிப் போட்டதால் இதற்கு திருக்கண்ணங்குடி என்ற பெயர் வந்தது.

ஒரு சமயம் திருமங்கையாழ்வார் திருவரங்கம் கோயிலுக்கு திருப்பணி செய்யும் பொருட்டு நாகப்பட்டினத்திலிருநது தங்கமயமான ஒரு புத்தவிக்ரஹத்தை எடுத்து வந்தார். நள்ளிரவில் ஓய்வெடுக்க விரும்பிய பொழுது. இத்தலத்திலுள்ள புளிய மரத்தின் அடியில் புதைத்து விட்டு நான் அயர்ந்து உறங்கினாலும் நீ உறங்கி விடாமல் இந்த விக்ரகத்தை பார்த்துக் கொள் என்று புளிய மரத்தைப் பார்த்துச் சொன்னார். புளியமரமும், திருமங்கையாழ்வார் சொன்னபடி கேட்டு உறங்காமல் அந்த

விக்ரகத்தைக் காத்தது. அதனால் இன்றுவரை இங்குள்ள புளிய மரத்திற்கு 'உறங்காப் புளிய மரம்' என்ற பெயர் உண்டு. இன்னொரு அதிசயம் இங்குள்ள கிணறுகளில் தண்ணீரே தென்படுவதில்லை. இந்த ஊரில் என்ன வழக்கு நடந்தாலும் அது இன்றுவரை முடிவில்லாமலே சென்று கொண்டிருக்கிறது.

இத்தலத்தில் நடைபெறும் திருவிழாக்களில் 'திருநீர்' அணிந்து கொண்டு பொருமாள் காட்சியளிப்பது ஆச்சரியமான செய்தியாகும். கருடன் இரண்டு கைகளையும் கட்டிக் கொண்டு தரிசனம் தருகிறார். இத்தலத்தில் தாயார் சன்னதியிலுள் மூலவரும். உற்சவரும் ஒரே ஜாடையில் இருப்பது, வேறு எந்த கோயிலிலும் காணமுடியாத அதிசயம். திருமங்கையாழ்வார் மங்களாசாஸனம் செய்திருக்கிறார்.

**பரிகாரம் :**

பரம்பரைபரம்பரையாகவந்த சொத்துக்கள் கைவிட்டுப்போகாமல்இருப்பதற்கும் தம் குல மக்கள் வழிதவறி நடக்காமல் குடும்பப் பெருமையை நிலைநாட்டுவதற்கும், தெரியாத்தனமாக தவறுகள் செய்து வம்பில் மாட்டிக் கொண்டவர்களுக்கும், கொடுத்த வாக்குறுதியை காப்பாற்ற முடியாமல் தத்தளிப்போர்க்கும், கடன் சுமையால் வாடுபவர்களுக்கும் இந்த ஸ்தலம் நன்மையைச் செய்யும். இங்குள்ள பெருமாளை சேவித்து, அபிஷேகம் ஆராதனை செய்து வந்தால் போதும். பட்ட கஷ்டங்கள் அனைத்தும் பஞ்சாகப் பறந்து விடும்.

## 19. திருநாகப்பட்டினம்

நகரின் நடுவிலேயே பஸ் ஸ்டாண்டிற்கு வெகு அருகில் நடந்தே சென்று பெருமாளைத் தரிசிக்கும் கோயில்களில் நாகப்பட்டினத்திலுள்ள ஸௌந்தர்யராஜப் பெருமாள் கோயிலும் ஒன்று. மிகப் பழமையான கோயில் என்பது இதன் பெருமை. திருநாகப்பட்டினத்திற்கே பெருமை தரக்கூடிய இந்தக் கோயிலைப் பற்றி பிரம்மாண்ட புராணத்தில் நிறைய கதைகள் சொல்லப்பட்டிருக்கின்றன. மற்ற எல்லாவற்றையும் விட ஆதிசேஷன் இந்த தலத்தில் உள்ள ஸாரா புஷ்கரணியில் தவமிருந்து பெருமாளை நேரடியாகவே தரிசனம் செய்த ஸ்தலம்.

கோயிலில் ஏழுநிலை இராஜகோபுரம் மூன்று பிராகாரங்கள் இருக்கின்றன. மூலவர் நீலமேகப் பெருமாள் நின்ற திருக்கோலம். உற்சவர் சௌந்தர்ய ராஜ பெருமாள். தாயார் ஸௌந்தர்யவல்லி, கஜலஷ்மி. தீர்த்தம் ஸாரா புஷ்கரணி. விமானம் சௌந்தர்ய விமானம். நீலமேகப்பெருமாள் கதையுடன் நின்று அருள்பாலிப்பது விசேஷம். முதலில் நாகன் பட்டிணம். பிறகு நாகப்பட்டினமாக மாறிற்று. ஆதிசேஷனை தனது சயனமாக பெருமாள் ஏற்றுக் கொண்ட சம்பவம் இங்குதான் நடந்தது. மிக அபூர்வமான அஷ்டபுஜ நரசிம்மரின் வெண்கலச் சிலை இங்குண்டு. ஒரு கை பிரஹ்லாதனின் தலையைத் தொட்டும் மற்ற கைகள் ஹிரண்யானை வதம் செய்கின்றவனவாக இருக்கிறது. அபயஹஸ்தம் காணலாம்.

உத்தானபாதன் அரசனின் குமாரனான துருவன் பெருமாளை நினைத்து கடுமையாகத் தவம் செய்தான். துருவனின் தவத்தைக் கலைக்க பல்வேறு முயற்சிகள் நடந்தன. ஆனால் துருவன் அசரவே இல்லை. இளம் பாலகன் ஒருவன், இப்படியொரு கடுந்தவத்தை செய்ததைக் கண்டு மகிழ்வடைந்த எம்பெருமான் கருட வாகனத்தில் துருவனுக்கு காட்சி கொடுத்து 'உனக்கு என்ன வரம் வேண்டும்'. என்று கனிவுடன் கேட்டார். இறைவனின் பேரழகில் மயங்கிய துருவன், தான் எதற்காக இத்தனை கடுந்தவம் செய்து கஷ்டப்பட்டேனோ அந்த மூலகாரணத்தை விட்டு விட்டு இவ்வளவு அழகாக இருக்கும் தாங்கள் இந்த தலத்தில் பேரழகோடு எப்பொழுதும் எனக்கு தரிசனம் தரவேண்டும் என்று கேட்டான். எம்பெருமானும் துருவனின் ஆசையை நிறைவேற்ற இந்த ஸ்தலத்தில் சௌந்தர்ய ரூபமாகவே காட்சி அளிக்கிறார்.

நாகப் பெருமானுக்கும் துருவனுக்கும் பெருமாள் நேரடியாக காட்சி தந்த ஸ்தலம் என்பது பெருமை. நாக கன்னிகையை மணக்க விரும்பிய சோழ நாட்டு அரசனின் வேண்டுதலை சௌந்தர்யராஜப் பெருமாள் நிறைவேற்றி வைத்திருக்கிறார். திருமங்கையாழ்வார் மங்களாசாஸனம் செய்த கோயில்களில் இதுவும் ஒன்று.

**பரிகாரம் :**

ஜாகதத்தில் நாகதோஷம் உள்ளவர்கள், கால சர்ப்பதோஷம் உள்ளவர்கள், நாகத்தினால் தீண்டப்பட்டு உயிர் இழந்த குடும்பத்தினர். மேலும் பாதிக்கப்படாமல் இருக்கவும், திருமணமாகாமல், வம்சவிருத்தி தோஷம் உள்ளவர்களும், பிறக்கின்ற குழந்தைகள் அழகும் அறிவும் கொண்டு பிறக்க வேண்டும என்று நினைப்பவர்களும், இந்த சௌந்தர்யராஜப் பெருமாள் ஸ்தலத்திற்கு வந்து கடுமையாகப் பிரார்த்தனை செய்து வழிபட்டால் அவர்களுக்கு எத்தகைய தோஷங்கள் இருந்தாலும் விலகும். நல்ல புத்திரர்கள் பிறப்பார்கள். அவர்கள் தெய்வ வடிவாகவும் பிறந்து முன்னோர்களது பாவத்தையும் கழித்து, குடும்பத்தை சௌபாக்கியமாக மாற்றவார்கள் என்பது இந்த ஸ்தலத்திற்கே உரிய பெருமை.


**THE TIRUVATEESWARAR HINDU JANOPAKARA NIDHI LTD**

SINCE 1909

**ACCEPTS FIXED DEPOSITS**
**SANCTIONS LOAN AGAINST SECURITY OF JEWELS,**
**LAND & BUILDING WITHIN AND ADJOINING CHENNAI CITY**
**AND ALSO ON ITS OWN DEPOSITS**

New No.50, Old No.36, Kuppumuthu Street, Tiruvateeswaranpet,
Chennai – 600 005. Ph: 044-28414520

*With best compliments from*

**N. SRINIVASAN**
Managing Partner

# M.V.P. NATESA MUDALIAR & SONS
# M.V.P.N.K. ENTERPRISES

DISTRIBUTORS : XETEX - NONWOVEN INTERLINING
STOCKIST OF : MADURA COATS &
STOCKIST OF ALL GARMENT ACCESSORIES

**New No.5, Old No.4, Bangaru Street, Ellis Road,**
**Mount Road, Chennai - 600 002.**
Phone : 044-2858 4077, Mobile : 98417 22419, Telefax : 044-2851 0748

*With best compliments from*

# S.M. INTERIORS

(INTERIOR CONTRACTORS)
Suppliers of : All types of False Ceiling and Partition Materials,
Fibre Glass wool, False Flooring & All Accessories

★ GYB Board False Ceiling ★ GYB Board Partition ★ Cornics Mouldings ★ Armstong Grid Ceiling ★ Plaster of Paris ★ Painting Works ★ Aerocon Partition ★ Vinayal Floorings ★ Aluminium Partition & ACP Work Etc

New No.5A, Main Street, P.P. Garden, Aminjikarai,
Chennai - 600 029. Tel : 044-26208993, 43532451
Cell : 9444062351
E-mail : sminteriorslu@gmail.com / smenterpriseslu@gmail.com

# தமிழ்நாடு அரசு நலத்திட்டங்கள்

சமூக நலம்

## பாதுகாப்பு மற்றும் ஆதரவு தேவையான குழந்தைகளை கவனிக்கும் நிறுவனங்களுக்கு மானியம் வழங்கப்படும் திட்டம்

| | | | |
|---|---|---|---|
| 1. | திட்டத்தின் பெயர் | : | பாதுகாப்பு மற்றும் ஆதரவு தேவையான குழந்தைகளை கவனிக்கும் நிறுவனங்களுக்கு மானியம் வழங்கப்படும் திட்டம் |
| 2. | திட்டத்தின் குறிக்கோள் | : | கைவிடப்பட்ட குழந்தைகள் சாதாரண குடிமகனாக வாழ மறுவாழ்வு அளித்தல் |
| 3. | உதவி அளித்தல் | : | உணவு, தங்குமிடம் மற்றும் கல்வி |
| 4. | அடிப்படை தகுதி | : | கைவிடப்பட்ட குழந்தைகளின் வயது 5 முதல் 18 வயது வரை இருத்தல் வேண்டும்.<br><br>பெற்றோர் / பாதுகாவலர் ஆண்டு வருமானம் ரூ.12,000 க்கு மிகாமல் இருக்க வேண்டும்<br><br>பெற்றோர் அல்லது உறவினர் இல்லாத குழந்தைகள்<br><br>தந்தையோ, தாயோ ஒருவர் இருக்கும் பட்சத்தில் அவர்கள் இறக்க நேரிட்டாலோ, கைவிட்டாலோ தீராத நோய் இருந்தாலோ சிறை வாசம் அடைந்திருந்தாலோ அந்த குழந்தைகளுக்கு<br><br>நிரந்தர இடம் இல்லாத அனாதை குழந்தைகள், கைவிடப்பட்ட குழந்தைகள் |
| 5. | உதவியின் பங்கு அளவு | : | மாதம் ரூ.225/- ஒரு குழந்தைக்கு 2007 - 2008 முதல் (அரசாங்க பங்கு) மாதம் ரூ.56 ஒரு குழந்தைக்கு (நிறுவனத்தின் பங்கு) |
| 6. | அணுக வேண்டிய அலுவலர் | : | மாவட்ட சமூக நல அலுவலர் |
| 7. | குறைகளை தெரிவிக்க வேண்டிய அலுவலர் | : | மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சியர் மாவட்ட சமூக நல அலுவலர், மாநில அளவில் சமூக நல இயக்குநர், சேப்பாக்கம், சென்னை - 600 005. ☎ 28545728 |

# “யாதவர் பாசறை”

மாத இதழ் மூலம் யாதவ சமுதாயம் விழிப்புணர்வு பெற்று வாழ்வில்
வெற்றி பெற எங்களது மனமார்ந்த வாழ்த்துக்கள்.

## ASOK STEELS

106/14, கே.எச். ரோடு,
கொருக்குப்பேட்டை, சென்னை - 21.
செல் : 9994333283

## AGD TRADERS

109 A, ஜி.எஸ்.டி. ரோடு,
மேலவலம்பேட்டை, கருங்குழி - 603 303
செல் : 9994332283

## AGD STEELS

200/A, யாதவர் தெரு, வல்லம் ஸ்கூல் அருகில்,
செங்கல்பட்டு
செல் : 9994334283

எங்களிடம் கட்டிடங்களுக்கு தேவையான
**கம்பி, சிமெண்ட், செங்கல், மணல், ஜல்லி** குறைந்த விலையில் கிடைக்கும்



*With Best Compliments from :*

**G.THIRUVENGADAM YADAV,** M.A.,B.L.,

# SRI LAKSHMI ROAD LINES

**FLEET OWNERS AND TRANSPORT CONTRACTORS**
***MILK*GLUCOSE*ETHOLEIN OXIDE*P.OXIDE**

**Plot No. M.C.I., Block No.3 (Opp.4/1)**
**Mogappair East, Chennai – 600037**
**Phone :26561889 Fax: 26562230**
**Mob: 9385558598**
**Email: srilakshmiroadlines@hotmail.com**

## காஞ்சிபுரத்தில் கல்யாண மாலை

27-2-2011 அன்று காஞ்சிபுரம் கோகுலம் திருமண மண்டபத்தில், சென்னை, யாதவா சோஷியல் அசோசியேஷன் சார்பாக கல்யாண மாலை நிகழ்ச்சி விமரிசையாக நடைபெற்றது. ஐநூறுக்கும் மேற்பட்ட யாதவ பெருமக்கள் கலந்து கொண்டனர். நிகழ்ச்சியில் அறுநூறுக்கும் மேற்பட்ட மணமக்களுடைய விவரங்கள் திரையிட்டுக்காட்டப்பட்டது. வந்திருந்தவர்கள் குறிப்பு எடுத்துக் கொண்டார்கள். விழாவுக்கு வந்திருந்த பெற்றோர்கள் தங்கள் மகன், மகள் பற்றிய விவரங்களை எடுத்துரைத்து அறிமுகப்படுத்திக்கொண்டனர். பின்னர் தங்கள் பிள்ளைகளுக்கு ஏற்ற ஜாதகங்களை பரிமாறிக் கொண்டனர். இதில் சில பெற்றோர்கள் தங்கள் மகள் / மகன் நேரில் அழைத்து வந்து அறிமுகப்படுத்தி வைத்தது குறிப்பிடத்தக்கது. சென்னையிலிருந்து யாதவா சோஷியல் அசோஷியேசன் சார்பாக தலைவர் யுவராஜ் அவர்களும், விவேக் ராகவன், ஜனார்த்தனம், சிவானந்தம், சந்திரசேகரன் மற்றும் சக்திராம் அவர்களும் மற்றும் பலரும் கலந்து கொண்டனர். தலைவர் யுவராஜ் அவர்கள் விழாவுக்கு வந்திருந்தவர்களை வரவேற்று இம்மாதிரியான நிகழ்ச்சிகள் மூலமாக மணமக்களின் பெற்றோர்கள் பயனடைய வேண்டும் என்று கூறினார். விழாவில் பேசிய வழக்கறிஞர் அரசு அவர்கள் காஞ்சிபுரத்தில் முதல் முறையாக கல்யாண மாலை நிகழ்ச்சி நடத்திக் கொடுத்தற்கு திரு. யுவராஜ் அவர்களை வெகுவாக பாராட்டினார். திரு. அரங்கனாதன் அவர்களும் கலந்து கொண்டார். மண்டபம், மற்றும் மதிய உணவுக்கு ஏற்பாடு செய்து கொடுத்த திரு. அரசு அவர்களை தலைவர் யுவராஜ் பாராட்டினார். பின்னர் விழா இனிதாக நிறைவேறியது.

## வானூரில் முப்பெரும் விழா

யாதவ நல சங்கம், வானூர், 13-02-2011 அன்று பாண்டிச்சேரி அருகில் உள்ள வானூரில் வேலை வாய்ப்பு முகாம், இணைய தளம் மற்றும் பாராட்டு விழா என முப்பெரும் விழா ஒன்றை ஏற்பாடு செய்து சிறப்பாக நடத்தி வைத்தது. விழாவிற்கு வந்திருந்தவர்களை சங்கத்தின் தலைவர் திரு. செல்வ கணேசன் யாதவ் அவர்கள் வரவேற்றுப் பேசினார். விழாவில், இத்தாலி பல்கலைக் கழகத்தில் சிறந்த கல்வி சேவைக்காக டாக்டர் பட்டம் பெற்ற ஆச்சார்யா கல்வி நிறுவனங்களின் சேர்மன் திரு. அரவிந்தன் அவர்களும், அகில இந்திய ஹாக்கி சம்மேளனத்தின் செனட் உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்ட கோல்டன் கம்பெனி குழுமத்தின் தலைவர் திரு. திருமுருகன் அவர்களும், கவிஞர் தமிழ் ஒளி அவர்களைப் பற்றி ஆய்வு கட்டுரை எழுதி நூல் வெளியீடு செய்த திருமதி S. பவானி அவர்களும் பாராட்டப் பெற்றனர். விழாவில் சிறப்பு விருந்தினராக சென்னை, யாதவா சோஷியல் அசோசியேஷன் தலைவர் திரு. யுவராஜ் அவர்களும், ஆதித்யா கல்வி நிறுவனங்களின் தாளாளர் திரு. ஆனந்தன் அவர்களும் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்கள். மேலும் விழாவில் புதுச்சேரி அஞ்சப்பர் செட்டிநாடு உணவகத்தின் பங்குதாரர் திரு. ராஜகோபால், திரு. பத்மநாபன், திரு. இராஜாமணி திரு. விநாயக மூர்த்தி, திரு. எல்லப்பன், திரு. வேணுகோபால், திரு. சிவானந்தம் மற்றும் பலரும் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர். விழாவின் முடிவில் மதிய உணவு அளிக்கப்பட்டு, விழா இனிதே நிறைவு வெற்றது.

Work in Divine

# D. Shanmugam

## SANTHOSH FURNITURE

INTERIOR DESIGNERS & DECORATORS

***All kinds of High Class Quality in House,***
***Office & Computer Furnitures***

★ ***Wooden Partition & Furniture*** ★ ***Aluminium Fabrication***
★ ***Heritage Surface Texture*** ★ ***False Ceiling (Any Kind)***
★ ***Home, Office and Computer Furnitures***

No.69, Jawaharlal Nehru Salai, (100 Feet Road), Vadapalani,
Chennai - 600 026. ✆ : 24848417, 42136824, Mobile : 9380448417

CHOSUN WELDING CO., LTD
KOREA
Authorised Dealer
D&H secheron
Falcon WELDING CABLE

**Welding Electrodes**

# CLARION
## ENTERPRISES

No.635, C.T.H. Road, Mannurpet, Chennai - 600 050. India
Ph : 044-26246581, Telefax : 26253836
E-mail : cleancare@vsnl.net

# அடைப்பான் நோய்

டாக்டர் **பூவண்ணன்,** கால்நடை மருத்துவர்.

இந்நோய் பொதுவாக ஆடு, மாடுகளில் காணப்படும். ஒருவித தொற்று நோயாகும். இது பேசிலஸ் ஆன்த் ராஸிஸ் எனும் பாக்டீரியா வால் ஏற்படுகிறது. இது உயிர் கொல்லி நோய். இது காற்று, மண், நீர், கொசு, ஈக்கள் ஆகியவைகளால் பரவும்.

சிகிச்சை அளிக்காத கால்நடைகள் 14 நாட்களுக்குள் இறந்து விடும்.

**நோயின் அறிகுறிகள் :**

கால் நடைகளின் மூக்கு, ஆசனவாய், பிறப்பு உறுப்பு, வாய் ஆகியவைகளிலிருந்து ரத்தம் வடியும், அதிக ஜுரம் எழுந்திருக்க முடியாமல் ஒரு பக்கம் கால்களை நீட்டிக் கொண்டு படுத்திருக்கும். இந்த அறிகுறிகள் இருந்தால் சுமார் 24 மணி நேரத்திற்குள் இறந்து விடும். இறந்த ஆடு மாடுகளை பிரேத பரிசோதனை செய்யாமல், இறைச்சிக்காக உபயோகப்படுத்தாமல் அப்படியே ஆழ புதைத்து விடவேண்டும். பிறகு அதன் மீது சுண்ணாம்பு, பிளீச்சிங் பவுடர் கொட்டி நன்றாக மணலை நிரப்பி முட வேண்டும். நாய்கள், கழுகுகள், நரி ஆகியவைகள் புதைத்த கால் நடைகள் கிளரி எடுக்காமல் ஆழ புதைக்க வேண்டும். இறந்த கால்நடைகளின் காதிலிருந்து ரத்த பரிசோதனைக்காக ஆய்வகத்தில் பரிசோதித்து நோய் ஊர்ஜிதம் செய்த பின் பிற கால்நடைகளுக்கு அனைத்தும் அடைப்பான் தடுப்பூசி கண்டிப்பாக போடவேண்டும். இது ராணிப்பேட்டையிலுள்ள கால் நடை தொத்து நோய் தடுப்பு மருந்து நிலையத்தில் கிடைக்கும் கால்நடை மருத்துவர் மூலம் தடுப்பூசி போட்டு பயன் பெறலாம்.

# வார்த்தை விளையாட்டு

இந்த விளையாட்டின் நோக்கம், நம் குழந்தைகளை ஆங்கில வார்த்தைகள் அதிகம் கற்றுக் கொள்ளவும், பழகிக் கொள்ளவும் வைப்பது தான். இந்தக் கட்டத்தில் உள்ள எழுத்துக்களை உபயோகித்து, குறைந்தபட்சம் 4 எழுத்துக்கள் கொண்ட வார்த்தைகளை உருவாக்க வேண்டும். ஒவ்வொரு வார்த்தையிலும் பெரிய அளவில் இருக்கும் எழுத்தை கண்டிப்பாக உபயோகிக்க வேண்டும். அதிக வார்த்தைகளை உருவாக்கிய யாதவ மாணவரின் பெயர், தந்தையார் பெயர், தாயார் பெயர் மற்றும் புகைப்படம், யாதவர் பாசறையில் பிரசுரிக்கப்படும்.

| | | | |
|---|---|---|---|
| W | I | G | R |
| H | I | T | |
| S | P | H | |

| | | | |
|---|---|---|---|
| G | I | N | L |
| P | E | P | |
| R | E | X | |

| | | | |
|---|---|---|---|
| O | U | R | M |
| T | O | M | |
| C | A | T | |

*With best compliments from :*

# K. RAMESH

Proprietor

# SUBARDHINIS ASSOCIATES

Dealing in **SEWING THREADS**

25, V.R. Pillai 2nd Street, Triplicane,
Chennai - 600 005.
Mobile : 9444388367

*With best compliments from :*

# MEENAKSHI MAHAL
# &
# MEENKASHI PLYWOODS

## *Ramu Yadav*

9/238A, Keezh Pallivasal Street,
Paramakudi, Ramanathapuram District

# பவனமுக்தாஸனா - முதல் பாகம்
## வாத நோய் நிவாரண பிரிவு

- திரு. யோக முத்து

இந்தப் பிரிவு ஆஸனங்கள் உடலின் மூட்டுகளை தளர்த்துவது பற்றியது. வாய்வுத் தொல்லை உடையவர்களுக்கும், மூட்டு வீக்கம் / கீல்வாதம் இவைகளால் அவதிப்படுபவர்களுக்கும் அதிக ரத்த அழுத்தம் உடையவர்களுக்கும். இருதயக் கோளாறு உடையவர்களுக்கும் மற்றும்சில சிக்கலான நோய் உடையவர்களுக்கும் இது ஒரு சீரிய பயிற்சி ஆகும். மேற்கண்ட சூழ்நிலையில் உள்ளவர்கள் கடின உடற்பயிற்சி செய்யக் கூடாது என்று அறிவுறுத்தப்பட்டவர்கள். இந்த பிரிவு குறிப்பாக மூட்டுகளிலும் உடலின் வெளிப்புற எல்லைகளிலும் ஏற்படும் சக்தி ஓட்டத் தடைகளை நீக்குவதற்காக பயன்படுகிறது. மேலும் இது ப்ராண சரீரத்தின் மீதும் மன சரீரத்தின் மீதும் கூட செயலாற்றுகிறது.

**கீழ்க்கண்ட முறையில் பயிற்சிகளை மூன்று வழிகளிலும் செய்யலாம் :**

1. அங்க அசைவுகளின் மேல் கவனம் பல : அங்கங்கள் ஒன்றுக்கொன்று இடையே ஏற்படுத்தும் விளைவுகள் மேல் அதாவது எலும்புகள், மூட்டுகள், எலும்புகளை இணைக்கும் தசை நார்கள், தசைகள் முதலியவை மேல் ஒன்று மற்றதைக் சார்ந்து செயல்படும் அங்க இயக்கங்கள் மேல் கவனம், சற்று எண்ணிக்கையை மனதில் கூறிக் கொள்வது மேலும், மனதில் ஏற்படும் எண்ணங்கள் போன்றவைகள் மேல் கவனம் செலுத்துவது.

2. கவனத்துடன் சுவாஸத்தை இணைத்தல் : மேலே விவரிக்கப்பட்டபடி அங்க அசைவுகள் மேல் கவனம் செலுத்துவதுடன் தனி அசைவுகள் சுவாசத்துடன் இணைந்து செய்லபடுத்தப்படுகிறது. இதன் மூலம் அசைவுகளின் வேகம் குறைகிறது. இதன் விளைவாக மூளையில் உண்டாகும் எண்ண அலைகளின் வேகம் குறைகிறது. இதனால் அமைதியும், விழிப்புணர்ச்சியும் மேம்படுத்தப்படுகின்றன. இந்த முறையில் பயிற்சி செய்வது, உடல் மற்றும் ப்ராண மட்டங்களில், மேம்பட்ட விளைவுகளை தோன்றச் செய்கிறது மேலும் இம்முறை குறிப்பாக உடல் உள்ளுறுப்புகளின் செயல்பாடுகளை மேம்படுத்தவும், உடலில் புத்தூணர்ச்சியூட்டவும், உடல் பாகங்கள் இசைந்து செயல்படச் செய்யவும் உதவியாக இருக்கிறது. ஒவ்வொரு ஆஸனத்திற்கும், அதற்கான விரிவுரையில் குறிப்பிட்டபடி மூச்சுவிடுதலை மேற் கொள்ள வேண்டும். கூடுதலாக உஜ்ஜயி ப்ராணாயாமா வை (ப்ராணாமயமா பயிற்சிகள் என்ற பகுதியைப் பார்க்கவும்). சுவாஸ யுக்கியாகப் பயன்படுத்தும் போது அதிகப் பயன் கிட்டுகிறது. இது பயனுள்ள வகையில் நாடிகளில் பாயும் ப்ராண சக்தி ஓட்டத்தை தூண்டவும் சமன்படுத்தவும் செய்கிறது.

3. உடலில் ப்ராண சக்தியின் போக்கின் மீது கவனம் ப்ராண சக்தியின் ஓட்டம், குறுகுறுப்புடன் கிளர்ச்சியூட்டும் அனுபவமாக உணரப்படுகிறது. பயிற்சி முன்னேற்றத்தில் இதற்கு தேவையான கூர்மையான உணர்வு கிட்டுகிறது.

**குறிப்பிட்ட காலங்களில் ஓய்வு**

இரண்டு அல்லது மூன்று இயக்கங்களின் முடிவில் கண்களை முடிக் கொண்டு அடிப்படை நிலையில் அமைதியாக அமர்ந்து கொள்ளவும் இந்த நிலையில் இருந்து கொண்டு இயற்கையான சுவாசத்தின் மேலும் இயக்கப்பட்ட அங்கங்கள் மேலும் மனதில் எழும்பும் எண்ணங்கள் முதலியவற்றின் மேலும் கவனம் செலுத்தவும் ஒரு நிமிட அளவிற்கு இந்த பயிற்சியை மேற்கொள்ளவும். இது உடலுக்கு ஓய்வு கொடுப்பது அன்றி உடலின் உள்ளுறுப்புகளில் உண்டாகும் சக்தி ஓட்டங் பாங்குகளை அறியும் விழிப்புணர்ச்சியும் மனம் மற்றும் உணர்ச்சிகளின் போக்கையும் அறியும் விழிப்புணர்ச்சியை உண்டாக்குகிறது. இந்த இடை ஓய்வு நேரங்களின் எறக்குறைய ஆஸனப் பயிற்சி அளவு முக்கியத்துவம் வாய்ந்தவை ஆகவே இவைகளைப் புறக்கணிக்க கூடாது.

ஆஸனப் பயிற்சி திட்டத்தின் எந்த ஒரு கட்டத்திலும் சோர்வு ஏற்படுமாயின் சுவாஸனத்தில் ஓய்வு கொள்ளவும் பயிற்சி தொகுப்பின் முடிவில் மூன்று அல்லது ஐந்து நிமிடங்கள் வரை சுவாஸனம் மேற்கொள்ள வேண்டும்.

**ஆரம்பி நிலை :**

பவன முக்தாஸனா பகுதி ஒன்றில் உள்ள எல்லா பயிற்சிகளும், தரையில் ஆரம்ப நிலையில் அமர்ந்து செய்யப்படுகிறது. செயல்படுத்தப்படும் ஆஸனத்துடன் தொடர்புள்ள தசைகள் மட்டும் உபயோகித்தில் இருக்க வேண்டும். உடலின் மற்ற பகுதிகளை அமைதியாகவும் தளர்ச்சியுடனும் வைத்திருக்க வேண்டும். ஆஸனங்களின் செயல்பாட்டின் மேல் மேற்கண்ட குறிப்புகளின் படி முழு கவனம் செலுத்தப்பட வேண்டும் மிகுதியான பயனுக்கு கண்களை மூடி இருக்க வேண்டும். பயிற்சியை கவனத்துடன் செய்ய வேண்டும். இயந்திரம் போன்று செயல்படக் கூடாது.

**பத்மாஸனா :**

தாமரையை ஒத்த நிலை

★ கால்களை உடம்பின் முன்பு நேராக வைத்து அமரவும்

★ ஒரு காலை நிதானமாகவும் கவனத்துடனும் மடக்கி அதன் பாதத்தை எதிர் தொடையின் மீது வைக்கவும்.

★ பாதம் மேல் நோக்கியும் குதிகால் இடுப்பெலும்புக்கும் அருகிலும் இருக்க வேண்டும்.

இந்த நிலை சௌகரியமாக இருக்கும் பட்சத்தில் மறு காலை மடக்கி எதிர்தொடையின் மீது வைத்துக் கொள்ளவும்.

ஆஸனம்நிறைவானதாக இருக்க இரு முழங்கால்களும் இறுதி நிலையில் தரையை தொட்டுக் கொண்டிருக்க வேண்டும்.

தலையையும் முதுகு தண்டையும் நிமிர்த்து வைத்துக் கொள்ள வேண்டும். தோள்கள் தளர்ந்து இருக்க வேண்டும்.

கைகளை முழங்கால்களின் மீது சின் அல்லது ஞான முத்திரையில் வைத்துக் கொள்ளவும்.

முழங்கைகளை சிறிது அளவு மடக்கி கைகளை தளர்த்தி வைத்துக் கொள்ளவும். தோள்கள் உயர்ந்தோ அல்லது கூனியோ இல்லாமல் இருக்க பார்த்துக் கொள்ளவும்.

கண்களை மூடி முழு உடலையும் தளர விடவும்.

முழு உடல்பாங்கை மனதில் உணரவும். தேவைக்கேற்ப உடலை முன்னுக்கோ அல்லது பின்னுக்கோ சாய்ந்து சமநிலை மற்றும் ஒழுங்குநிலை உணரும் வரை சரி செய்து கொள்ளவும். பூரணமாக ஒழுங்கடைந்த நிலை பத்மாஸனத்தின் சரியான உடற்பாங்கை குறிக்கிறது.

**எதிர் விளைவுக்கான சாத்தியக் கூறுகள் :**

இடுப்பு கூடு வாதம் மற்றும் இடுப்பெலும்பு சுழற்றி பலவீனமான மற்றும் காயமுற்ற முழங்கால்கள் உடையவர்கள் இந்த ஆஸனத்தை செய்யக் கூடாது. தியான ஆஸனங்களுக்கு ஆயுத்தம் செய்யும் மற்ற இயக்கம் சார்ந்த ஆஸனங்கள் பயில்வதின் மூலம் முழங்கால்கள் வளையும் தன்மை மேம்படும், பத்மாஸனத்தை செய்ய முயலக் கூடாது.

**பயன்கள் :**

பத்மாஸனம் உடலை நீண்ட நேரத்திற்கு முழு அளவில் ஸ்திரமாக வைத்துக் கொள்ள உதவுகிறது. இந்த ஆஸனம் கால்களை உறுதியான அஸ்திவாரமாக கொண்டு நடு உடலையும் தலையையும் தூண் போல் நிறுத்திக் கொள்கிறது. உடலை ஸ்திரத்தன்மையும் மன அமைதியும் உண்மையான தியானத்திற்கு முதல்படியாகும். பத்மாஸனம் பிராண சக்தியை முதுகுதண்டின் அடிப்பாகத்திலுள்ள மூலாதார சக்ராவிலிருந்து தலையிலுள்ள ஸஹஸ்ரா சக்ரத்திற்கு வழி நடத்துகிறது, தியானத்தின் அனுபவத்தை உயர்த்துகிறது.

இந்த ஆஸனம் முதுகு தண்டின் அடிப்குதியில் அழுத்தம் கொடுப்பதினால் நரம்பு மண்டலம் தளர்ச்சி அடைகிறது. சுவாஸம் நிதானமாகவும் ஆகிறது. தசை இறுக்கங்கள் குறைக்கப்படுகிறது. ரத்த அழுத்தம் மிதமாகக்கப்படுகிறது. மூலதார மற்றும் ஸ்வாதிஷ்டான பகுதியிலுள்ள நரம்புகள் இயல்பு நிலைக்கு திரும்புகின்றன சாதாரணமாக கால்களுக்கு செல்லும் ரத்த ஓட்டம் வயிற்று பகுதிக்கு திசை திருப்பப்கட்டு ஜீரணம் ஊக்குவிக்கப்படுகிறது.




# HOTEL CHITRRA PARK

367, Travelers Bangalow Road,
Tiruchendur - 628 215
Tamilnadu, INDIA.
Tel : +91 4639 243766 / 243866
Fax : +91 04639 245983
Cell : + 91 9486380900 / 9965472812
hotelchitrapark@yahoo.com
contact@hotelchitrapark.in



MARUTI SUZUKI
Way of Life!

"யாதவர் பாசறை"
மாத இதழுக்கு
எங்களது உளங்கனிந்த நல்வாழ்த்துக்கள்..
**P. கார்மேகமணி**



**சோலமலை மாருதி**
(A Division of Solamalai Automobiles Pvt. Ltd.,)
28/5 B, மேலூர் ரோடு,
உத்தங்குடி, மதுரை.
Ph: 0452-4289999
Round the Clock 24 Hrs.
M.D.S. Available
OPEN 7 DAYS A WEEK
ISO9001

# நீங்களும் I.A.S. / I.P.S. ஆகலாம்

பேரா. டாக்டர் இரா.வீ. அப்பாத்துரை யாதவ்

நம்மால் முடியும் ! நாள் கடத்தாதீர் !!    விழித்தெழு ! வீறு கொண்டெழு !!

Now ! or Never !!

- சென்ற இதழ் தொடர்ச்சி

Civil Service Exams க்குத் தயார் செய்ததின் அடிப்படையில் மாநிலத்திலுள்ள TNPSC யில் Group ஐ தேர்வில் தேர்ச்சி பெற்று உயரதிகாரிகளாகப் பணியாற்றுபவர்கள் நிறைய பேர் இருக்கிறார்கள். எனவே மிக உயர்ந்த நோக்கத்தோடு உழைப்பது தான் முக்கியம். உழைப்பிற்கும் திறமைக்கும் ஏற்ப, உரிய சிறந்த வேலை நம்மைத் தேடிவரும் என்ற நம்பிக்கையோடு உங்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொள்ளுங்கள்.

**IAS தேர்வுகள் விவரம் :**

Civil Services Preliminary Examinations பற்றிய அறிவிப்பு பொதுவாக டிசம்பர் கடைசியிலோ அல்லது ஜனவரி முதல் வாரத்திலோ வெளியிடப்படும். இந்தத் தேர்வு மே மாதம் மூன்றாவது வாரம் நடைபெறும். ஆகஸ்ட் மாதத்தில் இந்தத் தேர்வு முடிவுகள் வெளியிடப்படும். இதில் தேறியவர்களுக்கு அக்டோபர் கடைசியிலோ அல்லது நவம்பர் முதல் வாரத்திலே மெயின் தேர்வுகள் நடக்கும். மெயின் தேர்வு முடிவுகள் மார்ச் முதல் வாரத்தில் வெளியிடப்படும். ஏப்ரல் மாதத்தில் நேர்முகத் தேர்வுகள் நடத்தப்படும். Civil Servicesக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் பட்டியல் மே முதல் வாரத்தில் வெளியிடப்படும்.

கடந்த ஆண்டில் 5.5. லட்சம் மாணவர்கள் சிவில் சர்வீஸ் முதல் நிலைத் தேர்வை எழுதினார்கள். அதில் 12000 பேர் மெயின் தேர்வு எழுதத் தேர்ந்தெடுக்கப்பட்டு, எழுதியுள்ளார்கள் அதிலிருந்து 3000 பேரோ 2000 பேரோ நேர்முகத் தேர்வுக்குத் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். அவர்களில் சுமார் 1000 பேர் இறுதியில் தேர்வு செய்யப்படுவார்கள்.

இத்தேர்வில் ஒரு முறை தேற முடியாமல் போனால் அவர்கள் மீண்டும் முதலில் இருந்தே துவங்க வேண்டும். மீண்டும் முதல் நிலைத் தேர்வு எழுதிய பின் மெயின் தேர்வு எழுதி வெற்றி பெற்றுத்தான் நேர்முகத் தேர்வுக்கு வரமுடியும் இவ்வளவும் கடுமையான தேர்வுமுறைகள் இருந்தாலும் கூட, முதல் முறையிலேயே தேர்ச்சி பெற்று வெளிவருகின்ற இளம் பட்டதாரிகளும் இருக்கவே செய்கிறார்கள். இந்த சாதனையாளர்களை முன் மாதிரியாக எடுத்துக் கொண்டு தான் நீங்கள் உழைத்து உயர வேண்டும்.

**தேர்வு முறையில் மாற்றம்**

சிவில் சர்வீஸ் முதல் நிலைத் தேர்வில் புதிய மாற்றங்களை மத்திய அரசு தற்போது அறிவித்துள்ளது இந்த மாற்றங்கள் வரவிருக்கும் முதல் நிலைத் தேர்வு 2011 முதல் அமலுக்கு வருகின்றன.

**ஏற்கனவே இருந்த முறை**

சிவில் சர்வீஸ் முதல்நிலைத் தேர்வில் ஏற்கனவே இரண்டு பிரிவுகள் இருந்தன Objective முறையில் வினாக்கள் அமைந்துள்ள இரண்டு தேர்வுகளில் முதல் தாள் General Studies ஆகும். இதற்கு 150 மதிப்பெண்கள். தேர்வு நேரம் 2 மணி நேரம். இரண்டாவது தாள் விருப்பப் பாடம். Agriculature தொடங்கி Zoology முடிய உள்ள 23 பாடங்களில் ஏதாவது ஒன்றை விருப்பப்பாடமாகத் தேர்வு செய்து கொள்ளலாம். இதற்கு 300 மதிப்பெண்கள். தேர்வு நேரம் 2 மணி நேரம் இத்தேர்வுகளில் தவறான பதில்களுக்கு Negative Marks வழங்குகின்ற முறையும் உள்ளது.

**புதிய முறை :**

30 ஆண்டுகளுக்குப் பிறகு சிவில் சர்வீசஸ் தேர்வுகளில் தற்போது தான் மாற்றங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. அதுவும் முதல் நிலைத் தேர்வில் (Prelims) மட்டும் தான் (மெயின் தேர்வில் மாற்றம் எதுவும் செய்யப்படவில்லை) இப்போதும் 2 தாள்கள் தான் அரசின் புதிய அறிவிப்புப்படி முதல் தாள்.

**General Studies :**

இதில் தேசிய மற்றும் சர்வதேச முக்கியமான நடப்புச் செய்திகள் இந்திய வரலாறு இந்திய தேசிய இயக்கம், இந்திய மற்றும் உலகப் புவியியல் இந்திய அரசியல் மற்றும் ஆட்சியியல், பொருளாதார - சமூக - வளர்ச்சி, சுற்றுச் சூழலியல் பொது அறிவியல் முதலியன இடம் பெற்றுள்ளன. இவை குறித்து முதல் தாளில் கேள்விகள் கேட்கப்படும். 2 மணி நேரம் நடைபெறும் இத்தேர்வுக்கு 200 மதிப்பெண்கள்.

**இரண்டாம் தாளில் ஏற்பட்டுள்ள மாற்றம் :**

முதல் நிலைத் தேர்வு இரண்டாம் தாளாக இருந்த விருப்பப் பாடம் இப்போது நீக்கப்பட்டுள்ளது. அதற்குப் பதிலாக Civil Service Aptitude Test புதிதாக அறிமுகப் படுத்தப்பட்டுள்ளது.

Comprehension

Communication Skills

Interpersonal Skills

Logical Reasoning and Analystical Ability

Decision making and Problem Solving

General Mental Ability

Basic Numeracy (Numbers and their relations order of magnitude etc. (X Std Level)

Data Interpretation Charts, graphs, tables, data sufficency etc. (X Std Level)

English Language Comprehension Skills (X Std Level)

ஆகியவற்றிலிருந்து இரண்டாம் தாள் கேள்விகள் கேட்கப்படும்.

இந்தத் தேர்வுக்கும் 2 மணி நேரம் 200 மதிப்பெண்கள்

மனப்பாடத்திற்கும் ஞாபகசக்திக்கும் முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வந்த நிலை மாறித் திறனறி தேர்வுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. வரும் ஆண்டில் புதியமுறைப்படி தேர்வு எழுதிப் படிப்பதற்கும், பயிற்சி பெறுவதற்கும் போதிய அவகாசம் உள்ளது. நல்ல முறையில் தேர்வுகளை எழுத நம்பிக்கையோடு முயற்சியைத் தொடங்குங்கள் நாளைக் கடத்தாதீர்கள்.

முதல் நிலைத் தேர்வு குறித்த அறிவிப்பு வெளியிடப்படும் போது எந்தெந்தப் பாடப்பகுதியிலிருந்து எத்தனை எத்தனை கேள்விகள் அமையும் என்பது போன்ற விரிவான தகவல்கள் தெரிய வரும்.

